## உபாகமம் 6:6-7

இன்று நான் உனக்குக் கற்பிக் கிற இந்த வார்த்தைகளே உன் இருத யத்திலே பதிந்திருக்கக் கடவது (உபா.14:2; 26:18). நீ அவைகளை உன் குமாரர் களுக்கு விவரித்துச் சொல்லவும், நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கை யிலும் வழியில் நடந்து போகை யிலும், தூங்குகையிலும், விழித்தெழுந் திருக்கையிலும் அவைகளைத் தியானிக்கக் கடவாய்.

## அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:31

அதற்கு அவர்கள்: ஆண்டவராகிய சேசுநாதரை விசுவசி. அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

## கொரிந்தியர் 1 1:10

சகோதரரே, உங்களுக்குள்ளே பிரிவினைகளில்லாமல், நீங்களனைவரும் ஒரே காரியத்தைப் பேசவும், ஒரே மன மும் ஒரே அபிப்பிராயமுமுள்ள உத்தம ராயிருக்கவும் வேண்டுமென்று நம்மு டைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து வின் நாமத்தினாலே நான் உங்களை மன்றாடுகிறேன். (பிலிப். 2:2; 3:16.)

## பழமொழியாகமம் 6:20

என் மகனே! உன் பிதாவின் கற்பனையை அநுசரி; உன் மாதாவின் கட்டளையையுங் கைநெகிழாதே.

## அருளப்பர் முதல் நிருபம் 4:20

சர்வேசுரனைச் சிநேகிக்கிறேன் என்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன். ஏனெனில், தான் கண்ணால் காண்கிற சகோதரனைச் சிநேகியாதவன், தான் காணாத சர்வேசுரனை எப்படிச் சிநேகிக்கக்கூடும்?

## சங்கீதங்கள் 133:1

இதோ ஆண்டவருடைய வீட் டிலே நம்முடைய சர்வேசுரனுடைய வாசஸ்தலத்தின் தலை வாசல்களிலே பிரவேசித்திருக்கும் ஆண்டவரு டைய சகல ஊழியர்களே! கர்த்தரை இப்போது வாழ்த்துங்கள்.

## இசாயாஸ் ஆகமம் 49:15-16

(அதற்கு மாறுத்தாரமாக:) பெண்ணானவள் தன் பாலனை மறப் பதுண்டோ? தன் கற்பகர குழந்தைக்கு இரங்காதிருப்பாளோ? அப்படி அவள் மறந்தாலும் நாம் உன்னை ஒரு போதும் மறக்கவறியோம். இதோ நமது கரங்களில் உன்னை அட்சரமிட்டிருக்கின்றோம்; உன் பட்டணத்து மதிள்கள் நம் கண் கள் முன் எப்போதும் பிரசன்ன மாகும் (யாத்.13:9).

எபேசியர் 6:4

தகப்பன்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கோபமூட்டாதிருங்கள். ஆனால் அவர்களை ஆண்டவருக்கேற்க ஒழுக்கத்திலும், கண்டிப்பிலும் வளர்ப்பீர்களாக.

சங்கீதங்கள் 103:17-18

ஊர்க்குருவிகள் அங்கே கூடு கட்டும். அவைகளில் நாரையினு டைய கூடே முதல். உயர்ந்த மலைகளிலே மான்கள் வசிக்கும்; கற்பாறைகளில் முள்ளம்பன்றி தங்கும்.

பழமொழியாகமம் 22:6

தன் வாலிப நாட்களில் வாலி பன் சென்ற மார்க்கத்தைத் தன் விருத்தாப்பியத்திலும் விடானென்று ஒரு பழமொழி.

யாத்திராகமம் 20:12

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கப்போகிற பூமியிலே நீ நெடுநாள் ஷஜீவிக்கும்பொருட்டு உன் தந்தையையும் தாயையும் சங்கித்திருப்பாயாக.

பழமொழியாகமம் 17:17

சிநேகிதவனாயிருக்கிறவன் எக்காலமும் நேசிக்கிறான்; இக்கட் டிலேயும் சகோதரனாவான்.

அருளப்பர் முதல் நிருபம் 3:2-3

மகா அன்பரே, இப்போது நாம் சர்வேசுரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போ மென்பது இன்னும் நமக்கு வெளிப்படவில்லை. அவர் தோன்றும்போது அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிவோம். ஏனெனில் அவர் இருக்கிறமாதிரியே அவரைத் தரிசிப்போம். மீளவும் அவர்மேல் இந்த நம்பிக் கை வைத்திருக்கிறவனெவனும், அவர் பரிசுத்தமாயிருக்கிறதுபோல் தன்னை யும் பரிசுத்தமாக்கிக்கொள்ளுகிறான்.

பழமொழியாகமம் 18:24

அநேகருக்கு பிரியமுள்ள மனி தன் சகோதரனைவிட அதிகமாய் அவர்களால் நேசிக்கப்படுவான்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 11:13

ஆனால் நீங்கள் தீயோராயினும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கொடைகளைக் கொடுக்க அறிந்தி ருக்கும்போது, உங்கள் பரம பிதாவானவர் தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய் நல்ல இஸ்பிரீத்துவைத் தந்தருளுவார் என்று திருவுளம்பற்றினார்.

அரசராகமம் 3 8:57

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நிகழ விடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந் ததுபோல் நம்மோடும் இருந்து வாசம் பண்ணக்கடவாராக!

பழமொழியாகமம் 23:24

நீதிமானின் பிதா சந்தோஷத் தால் அகமகிழ்கிறான்; ஞானியைப் பெற்றவன் அவனில் சந்தோஷிக் கிறான்.

ஷேஜாசுவாவின் திருவாகமம் 24:15

அல்லது கர்த்தரைச் சேவிக்கிற எங்களுக்கு ஆகாததாய் நீங்கள் கண் டால் உங்கள் இஷ்டப்படி செய் யுங்கள். உங்களுக்குச் சித்தமானால் மெசொப்பொத்தாமியாவில் உங்கள் பிதாக்கள் தொழுத தேவர்களை யாகி லும் நீங்கள் வாசம்பண்ணுகிற அமோறையர் தேசத்து விக்கிரகங் களையென்கிலுங் கும்பிட்டுச் சேவிக் கக்கூடும். நானும் என் வீட்டாரு மோ கர்த்தரையே சேவிப்போம் என்றான்.

பழமொழியாகமம் 17:6

புத்திரரின் புத்திரரோ விருத் தாப்பியரின் முடியாம்; புத்திர ருடைய மகிமையோ அவர்கள் பிதாக்களேயாம்.

தீமோத்தேயு 1 5:8

ஒருவன் தன் சொந்த ஷஜனங்களையும், விசேஷமாய்த் தன் வீட்டாரையும் விசாரியாதிருந்தால், அவன் விசுவாசத்தை மறுத்தவனும், அவிசுவாசியைவிட அதிகக் கெட்ட வனுமாய் இருக்கிறான்.

### பழமொழியாகமம் 23:15

என் மகனே! உன் மனமானது ஞானமுள்ளதாயிருந்தால் என் இருத யம் உன்னுடன் சந்தோஷிக்கும்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 19:18-19

அவன்: எந்தக் கற்பனைகளை? என்க, சேசுநாதர் திருவுளம்பற்றின தாவது: கொலைசெய்யாதிருப்பாயாக, விபசாரம் பண்ணாதிருப்பாயாக, கள வாணாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. (யாத். 20:12-16.) உன் பிதாவையும், மாதாவை யும் சங்கித்திருப்பாயாக; உன்னைப் போல உன் பிறனையும் சிநேகிப்பா யாக என்றார்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 19:19

உன் பிதாவையும், மாதாவை யும் சங்கித்திருப்பாயாக; உன்னைப் போல உன் பிறனையும் சிநேகிப்பா யாக என்றார்.

### பழமொழியாகமம் 10:1

ஞானமுள்ள புதல்வன் தன் பிதாவைச் சந்தோஷப்படுத்து கிறான்; ஆனால் மதிகெட்ட மகன் தன் மாதாவுக்குக் கஸ்தியை வருவிக் கிறான்.